முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1364

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.06.2023, சனிக்கிழமை

1. ஓங்கார பிரம்ம சொரூபமே
ஓங்கார மகா சூட்சுமமே
ஓங்காரமாக இந்த உலகுக்கு
அருளவேண்டி உயர் பண்புகள்
2. ஒப்பற்ற தொண்டர் படைகளை
தயவாக உலகெங்கும் உருவாக்கி
தர்ம ஞான ஆட்சி
தருவேன் இந்த உலகுக்கென
3. என அவதாரம் எடுத்த
இணையிலா ஆறுமுக அரங்கனே
ஞான தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 09 ம் நாள், 24.06.2023, சனிக்கிழமை)
4. வானவர்கள் மெச்சும் சபை உன் சபை
வள்ளல்மிகுந்த தன்மை நிறைந்தது உன் தர்மம்
தர்மத்தின் காவலன் நீயாக தரணியில் அற்புதத்தை நடத்திவர
கர்மத்தை வெல்லும் ஒரே உபாயம் கலியுகத்தில் உன் தர்மம் தானப்பா
5. அப்பனே அபயமெனஉன் சபைநோக்கி
அகிலத்தார் சரணடைந்து  உன் தர்மத்தை
காப்பேன் என கையில் எடுத்து உயர் சேவை
கலியுகத்தில் பசிபிணி விரட்டும் உபாயமாக
6. ஆகவே உன்வழி தொடர்ந்து வந்தால்
அரங்கனே யாவும் என நம்பிவிட்டால்
நம்பிவிட அவர்கட்கு ஞானபண்டிதன்
என் ஞானமும் சித்தியும் பரிபூரணமாகி

7. இம்மைதனை அறுக்கின்ற மகா சக்தியும்
இனிபிறவாத மறுமைவெல்லும் உயர் சக்தியும்
சக்தியும் தந்து அரங்கன் உமக்காய்
செகத்தினில் யாவர்க்கும் அருள்புரிவேன்
8. அருள்மிக்க அரங்கன் மார்க்கமே
அகிலத்தை மாற்றும் உயர் மார்க்கம்
பொருளுதவி உடல் உழைப்பு சேவை என
புண்ணிய வழியில் உன் வழி மக்கள் இணைய
9. இணைய இந்த லோகம் சடுதி மாற்றமாகும்
இணையில்லாத ஞான ஆட்சி கண்டு நிறைவும் காணும்
சுப்ரமணியர் யான் விளம்பிய
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–